பவானிசாகர் (இருபாலருக்கும்)

//மின்னஞ்சலில்//

**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்**

ந. க. எண். 004593 / அ4 / இ4 / 2024, நாள். 08.02.2024.

*****

பொருள் : பயிற்சி – அரசு அலுவலர் பயிற்சி நிலையம் – இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்களுக்கான41 பணி நாள்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி – 60வது **அணி – பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் (இருபாலருக்கும்) 13.02.2024 முதல் 01.04.2024 முடிய** நடைமுறைப்படுத்துதல் பணியாளர்களைப் பயிற்சிக்கு அனுப்புதல் – தொடர்பாக.

பார்வை :

1. பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலைய மாவட்டவருவாய்அலுவலர் / முதல்வரின் கடிதம் ந.க.எண். அ3/266/2024, நாள். 23.01.2024.
2. இவ்வலுவலக ந.க. எண். 004593/அ4/இ4/2024, நாள். 31.01.2024.
3. அரசுக் கடித எண். 6197819/பயிற்சி–1/மனிதவள மேலாண்மைத் (பயிற்சி–1) துறை, நாள். 01.02.2024.
4. பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலைய மாவட்டவருவாய்அலுவலர் / முதல்வரின் கடிதம் ந.க.எண். அ3/266/2024, நாள். 23.01.2024 (08.02.2024 அன்று மின்னஞ்சலில் பெறப்பட்டது).

******

பார்வை (1)இல் காணும் 23.01.2024 நாளிட்ட கடிதத்தின்படி **பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் (இருபாலருக்கும்) 13.02.2024 முதல் 01.04.2024 முடிய** நடைபெறவுள்ள **60ஆம் அணி** பயிற்சியில் கலந்து கொள்ளும் பொருட்டு பார்வையில் (2)இல் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளின் மூலம் 56 பணியாளர்களுக்கு ஆணை வழங்கப்பட்டது.

பார்வை (3)இல் காணும் அரசுக் கடிதத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, துறைத் தலைவரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரிந்து வரும் இளநிலை உதவியாளர்கள் / உதவியாளர்கள் மற்றும் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறும் இளநிலை உதவியாளர்களை அவர்களின் பணிவரன்முறை ஆணை வெளியிடும்வரை காத்திருக்காமல், முதுநிலை அடிப்படையில் அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகரில் வழங்கப்படும் அடிப்படைப் பயிற்சிக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், பார்வை (4)இல் காணும் அலுவலகத் தொலைபேசிச் செய்தி மூலம் பணிவரன்முறை செய்யப்பட்ட மற்றும் பணிவரன்முறை செய்யப்படாத பணியாளர்களையும் சேர்த்து கூடுதலாக 100 நபர்களை அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து, அதற்கு அடுத்த முன்னுரிமையில் உள்ள இணைப்பில் காணும் 100 நபர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள்.

(த.பி.பா.)

எனவே, மேற்காணும் பணியாளர்களைப் பார்வை (2)இல் காணும் செயல்முறைகளில் குறிப்பிட்டுள்ள நெறிமுறைகளைப் பின்பற்றி பயிற்சியில் கலந்து கொள்ள உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

**இணைப்பு** :
பார்வை (1)இல் கண்ட கடித நகல்
இணைப்புடன் மற்றும் பெயர்ப் பட்டியல்

**இணை இயக்குநர்**
**(பணியாளர் தொகுதி).**

**பெறுநர்**

சம்பந்தப்பட்ட பணியாளர்கள்
**நகல்** : சம்மந்தப்பட்ட அலுவலர்கள் } முதன்மைக் கல்வி அலுவலர்கள் மூலம்
**நகல்** : அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
**நகல்** : இவ்வியக்ககக 'அ2" பிரிவு.
**நகல்** : முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், ஈரோடு மாவட்டம்.
– அவர்களுக்குத் தகவலுக்காக அனுப்பப்படுகிறது.

| 13.02.2024 முதல் 01.04.2024 முடிய நடைபெறும் 41 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படைப் பயிற்சி 60வது அணியில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப்பட்ட பணியாளர்கள் விவரம் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க. எண். 004593/அ4/இ4/2024, நாள். 08.02.2024. | | | | | | | | |
| மாவட்டம் | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலக முகவரி | ஆண் / பெண் | நியமன முறை | பிறந்த தேதி (நாள்–மாதம்–ஆண்டு) | இளநிலை உதவியாளர் / தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை நாள் (நாள், மாதம், ஆண்டு) | தட்டச்சர் பதவியிலிருந்து பதவி உயர்வில் உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் (நாள், மாதம், ஆண்டு) | நேரடி நியமன உதவியாளர்களின் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் (நாள், மாதம், ஆண்டு) | குறிப்பு |
| சிவகங்கை | திருமதி.நர்மதா,<br>உதவியாளர்.<br>முதன்மைக்கல்வி அலுவலகம்,<br>சிவகங்கை | பெண் | TNPSC | 19/05/1990 | | | 24/02/2017 | |